1990 ஏப்ரல் 9]

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி.

*2185. திரு. ராம. நாராயணன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காரைக்குடி தொகுதியில் மின் வசதி இல்லாத ஆதி திரா விடர் குடியிருப்புகளுக்கு எப்போது மின் வசதி அளிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காரைக்குடி சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் உள்ள 180 ஆதிதிராவிடர் குடியிருப்புக்களில் 179 குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தட்டடி என்ற கிரா மத்திலுள்ள குடியிருப்புக்கு விரைவில் மின்வசதி அளிக்கப்பட்டு விடும்.

திரு. ராம. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுச் செய்தும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. மிக விரைவிலேயே கொடுத்தால் மிக நன்றாக இருக்கும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி கூடிய விரைவில் நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்குதல்.

* 3431 திரு. கோ. வீரையன் :

மாண்புமிகுஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1977 ஆம் ஆண்டு முதல் நிலுவையிலுள்ள, நாகை வட்டம் தேமங்கலம் கிராமத்தில் சிராங்குடி புலியூர் கிராம ஆதி திரா விடர்களுக்கு வீட்டுமனை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

9–50 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டம், தேமங்கலம் கிராமத்தில் வசிக்கும் உபரி ஆதிதிராவிடர்

குடும்பங்களுக்கு சிராங்குடி புலியூர் கிராமத்தில் வீட்டுமனை வசதி அளிப்பதற்கு நில எடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆர்ஜிதம் செய்த பிறகு, அறிக்கைகளை அனுப்பி ஒப்புதலைப்பெற்று குடியிருப்புகளுக்கு வீட்டு மனை அளிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாகை வட்டம் சிராங்குடி புலியூர் ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனை 1977ஆம் ஆண்டு கோரப்பட்டது. அதிலிருந்து தொடர்ந்து கோரப்பட்டு வந்தது. நில கையெடுப்புச் சட்டத்தின்கீழ் 6ஆம் படிவம் வெளியிடப்பட்டுவிட்டது. இதற்குப் பிறகு மேலும் தாமதம் ஆகாமல் அந்த அந்தக் குடியிருப்பு மனைகளுக்கு அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு அரசு இந்த மாதத்தில் அதற்கான அறிவிப்புகள் வெளியிடப்படுமா? அதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் வீட்டு மனைப் பட்டா வழங்க கிட்டத்தட்ட 2.3 கோடி ரூபாயும் வருகின்ற நிதி ஆண்டில் 40 ஆயிரம் வீட்டு மனைப் பட்டா வழங்க 2.5 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்ய இருக்கிறது. கடந்த காலங்களில் வீட்டுமனைப்பட்டா சரியாக வழங்கப்படாத சூழ்நிலையின் காரணமாகத்தான் கடந்த ஆண்டிலும், வருகின்ற நிதி ஆண்டிலும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்ய இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று கூடிய விரைவில் தக்க நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையினால் அந்த மனை வழங்குவதில் தாமதம் ஆகவில்லை. நிலத்தை கையகப்படுத்தக்கூடிய சட்டத்தில் இருக்கக்கூடிய ஏராளமான சிரமங்களின் விளைவாக அந்தக் குடியிருப்பு மனை வழங்குவதில் தாமதம் ஆகிறது. குறிப்பாக முன்னால் இருந்த அரசு குடியிருப்பு மனைகளுக்கு நஞ்சை நிலங்களை எடுக்கக்கூடாது என்று தடை ஆணை விதித்து இருந்தது. புஞ்சை நிலங்கள் கிடைக்காத இடத்தில் நஞ்சை நிலங்களை எடுக்கலாம் என்று அந்தத் தடை ஆணையை மாற்றுவதற்கும், நிலத்தைக் கையகப்படுத்தும் சட்டங்களில் இருக்கக்கூடிய பெரும் சிரமங்களை சுலபப்படுத்தி சீக்கிரமாக நிலங்களை கையகப்படுத்தும் முறையில் அந்தச் சட்டத்தில் உரிய திருத்தம் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 9]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் நிலம் கையகப்படுத்துவதில் பல்வேறு தடைகள் இருந்தன. அதை நிவர்த்தி செய்யும் பொருட்டுதான் தமிழக அரசு கடந்த 7 நாட்களுக்கு முன்பு கவர்ன்மெண்டு பிளீடர் ஒருவரை நியமித்து இருக்கிறது. எந்த தடைகளையும் கூடிய விரைவில் நீக்குவதற்கு உண்டான சூழ்நிலையின் காரணமாகத்தான் அவரை நியமித்து இருக்கிறோம். ஆகவே, தடைகள் நீக்கப்பட்டு வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரமங்கலம் மருத்துவமனை

* 3176 திரு. ஏ. கோதண்டம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

திருப்பெரும்புதூர் வட்டத்தில் மதுரமங்கலம் ஊராட்சியில் உள்ள அரசினர் பொது மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-அண்ணா மாவட்டம் திருப்பெரும்புதூர் ஒன்றியம் மதுரமங்கலம் கிராமத்தில் அரசினர் பொது மருத்துவமனை இல்லை. அங்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது.

ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு இரண்டு மருத்துவர்கள் என்ற அடிப்படையில் மதுரமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இரண்டு மருத்துவர்கள் பணி செய்வதால், மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இயலாது.

திரு. ஏ. கோதண்டம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் ஒன்றியம், மதுரமங்கலம் கிராமத்தில் அரசினர் பொது மருத்துவமனை இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆரம்ப சுகாதார மருத்துவ மனையில் இன்னும் பல மருத்துவர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 2 மருத்துவர்கள்தான் நியமிக்கின்ற வழக்கம். ஆகவே, 2 மருத்துவர்கள் அங்கே நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.